DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

----

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.2 COURT, SATTUR

| | |
|---|---|
| Name : முனியசாமி | Father/Husband Name : ஆறுமுகம் |
| Age : 33 | Village : ஓ.மேட்டுப்பட்டி |
| Taluk : | Calling : முதல் நிலை காவலர் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 16 July 2025

**மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை –**

1. நான் பத்தாம் வகுப்பு வரை படித்துள்ளேன். 2013 ஆம் ஆண்டு காவலர் பணியில் சேர்ந்தேன். நான் எனக்கும் மனுதாரருக்கும் நடைபெற்ற திருமணத்தை ரத்து செய்ய கேட்டு சிவகாசி சார்பு நீதிமன்றத்தில் HMOP.No.188/2017 தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். அதில் நானும் மனுதாரரும் எடுத்துக் கொண்ட புகைப்படத்தை முதல் ஆவணமாக தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். 4 வது ஆவணமாக எங்களுடைய திருமண பதிவு சான்றை தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். அந்த மனுவில், எனக்கும் மனுதாரருக்கும் 05.01.2017 ம் தேதி நடைபெற்ற திருமணத்தை ரத்து செய்ய கேட்டுள்ளேன் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் ம.சா.ஆ.1 ஆவணம் தான் எனக்கும் மனுதாரருக்கும் நடைப்பெற்ற திருமண பதிவு ஆவணம் என்றால் சரிதான்.

2. என்னுடன் உடன் பிறந்த நபர்கள் எத்தனை நபர் என்றால் ஒரு தங்கை, இரண்டு தம்பி ஆவார்கள். என்னுடைய அப்பா சுங்க வரியில் வேலை செய்கிறார். அவர் தற்போது எவ்வளவு சம்பளம் வாங்குகிறார் என்று எனக்கு தெரியாது. என்னுடைய அம்மா இல்லத்தரசியாக இருக்கிறார். என்னுடைய அப்பா ரூபாய் 50,000/–த்திற்கு மேல் சம்பளம் வாங்குகிறார் என்றாலும், வழக்கிற்காக தெரியாது என்று கூறுகிறேன் என்றாலும் சரியல்ல. நான் தற்போது எவ்வளவு சம்பளம் வாங்குகிறேன் என்றால் ரூபாய் 43,000/– வாங்குகிறேன், அதில் பிடித்தம் போக எனக்கு ரூபாய் 23,000/– வருகிறது. அதுபோக பர்சனல் லோன் கட்ட வேண்டியுள்ளது. அதுபோக என்னுடைய தங்கை திருமண செலவிற்கு வாங்கிய கடனும் செலுத்த வேண்டியுள்ளது. என்னுடைய தங்கை திருமணத்திற்கு எவ்வளவு செலவு செய்தோம் என்றால் ரூபாய் 4,00,000/– வரை செலவு செய்தோம். என்னுடைய தங்கைக்கு எந்த ஆண்டு திருமணம் நடைபெற்றது என்றார் 2019 ஆம் ஆண்டு என்று நினைக்கின்றேன், எனக்கு சரியாக ஞாபகம் இல்லை. என்னுடைய தங்கைக்கு எத்தனை பவுன் நகை போட்டோம் என்பது எனக்கு தெரியாது, அதை என்னுடைய தாயார் பார்த்துக் கொண்டார்.

3. எனக்கு சொந்தமான வீடு இருக்கிறது என்றால் என்னுடைய அப்பா பெயரில் வீடு இருக்கிறது. அது சுமார் 25 ஆண்டுகளுக்கு முன்பு கட்டிய வீடு ஆகும். எனக்கு அடுத்த சகோதரரின் பெயர் குருசாமி ஆகும். அவருக்கு எப்பொழுது திருமணம் நடைபெற்றது என்றால் 2021 ஆம் ஆண்டு என்று நினைக்கின்றேன். அந்த திருமணம் எங்கு வைத்து, யார் முன்னிலையில் நடைபெற்றது என்றால் எங்களுடைய ஊரில் வைத்து நடைபெற்றது, அன்றைய தினம் நான் பணி முடிந்து 12 மணிக்கு தான் சென்றதால் யார்

முன்னிலையில் திருமணம் நடைபெற்றது என்பது எனக்கு தெரியாது.

4. நான் தற்போது ஓ.மேட்டுப்பட்டியில் குடியிருந்து வருகிறேன். என்னுடைய பெற்றோருடன் தான் குடியிருந்து வருகிறேன் என்றால் சரிதான். நான் தினமும் வேலைக்கு வீட்டில் இருந்து தான் சென்று வருகிறேன் என்றால் சரிதான். என்னுடைய சகோதரரின் திருமணம் பல நாட்களுக்கு முன் நிச்சயிக்கப்பட்டு, திருமண பத்திரிக்கை அச்சடிக்கப்பட்டு, திருமணம் நடைபெற்றது என்றால் சரிதான். அந்த திருமண அழைப்பிதழை நான் பார்த்துள்ளேன் என்றால் பார்க்கவில்லை. நான் திருமண பத்திரிகையை பார்க்கவில்லை என்று வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல.

5. சுந்தரபாண்டியன் எனக்கு என்ன உறவு முறை என்றால் பெரியப்பா ஆவார். இப்படி சுந்தரபாண்டியன் இறந்த பிறகு அவருடைய மகன் ஊரில் உள்ள திருமணங்களுக்கு தலைமை தாங்கி நடத்தி வைப்பார் என்றால் அது எனக்கு தெரியாது. அந்த விபரம் எனக்கு தெரியும் என்றாலும், நான் வழக்கிற்காக தெரியாது என்று பொய்யாக கூறுகிறேன் என்றாலும் சரியல்ல. என்னுடைய திருமணம் தோல்வியில் முடிந்ததால் நான் எந்த திருமண நிகழ்வுக்கும் செல்வதில்லை. என்னுடைய தம்பி எங்கே குடியிருக்கிறார் என்றால் எங்களுடன் தான் குடியிருக்கிறார். நாங்கள் ஒரே வீட்டில் குடியிருக்கும் நிலையில், அவருடைய திருமணம் யாருடைய தலைமையில் நடைபெற்றது என்று தெரியாது என்று வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல.

6. என்னுடைய தம்பி கார்த்திகேயன் என்ன வேலை செய்கிறார் என்றால் கிடைத்த வேலைக்கு செல்வார். கவி தர்ஷினி என்ற பெயரில் நான் என்னுடைய தம்பிக்கு லாரி வாங்கி கொடுத்து அவர் அந்த லாரியை ஓட்டி வருகிறார் என்றால் இல்லை. என்னுடைய தம்பியின் திருமண பத்திரிக்கையில் ஞான கவி தர்ஷினி ஆட்டோ அண்ட் டிராவல்ஸ் என்றும் ஞான சுகதீஷ் பாண்டி லாரி சர்வீஸ் என்றும் கூறியுள்ளது நான் என்னுடைய தம்பிக்கு வாங்கி கொடுத்த வாகனங்கள் என்றால் சரியல்ல. என்னுடைய மற்றொரு சகோதரர் குருசாமி என்ன வேலை செய்கிறார் என்றால் வேன் ஸ்டாண்டில் ஆக்டிங் டிரைவர் ஆக வேலை செய்கிறார். நான் அவருக்கு சுமோ நான்கு சக்கர வாகனம் வாங்கி கொடுத்து, அதை அவர் ஓட்டி வருகிறார் என்றால் சரியல்ல.

7. TN 49 BC 3652 என்ற பதிவு கொண்ட வாகனம் யாருக்கு சொந்தமானது என்றால் என்னுடைய தம்பியும், சித்தப்பா மகனும் கூட்டு சேர்ந்து, என்னுடைய தம்பி பெயரில் வாங்கி ஓட்டி வந்தார்கள். அதில் அவர்கள் இருவருக்கும் ஏற்பட்ட பிரச்சனையில் என்னுடைய தம்பி அந்த வாகனத்தை என்னுடைய சித்தப்பா மகனிடம் கொடுத்து விட்டார். ஆனால், தற்போது வரை அந்த வாகனம் என்னுடைய தம்பி பெயரில் தான் இருக்கிறது என்பதற்கு என்னிடம் காட்டப்படும் ஆன்லைன் ரசீது சான்று என்றால் அது எனக்கு தெரியாது. அந்த ஆவணத்தின் படி அந்த வாகனம் என்னுடைய தம்பி பெயரில் தான் இருக்கிறது என்றால் சரிதான்.

8. மனுதாரர் என்னுடன் சேர்ந்து வாழ்வதற்காக சாத்தூர் சார்பு நீதிமன்றத்தில் HMOP.No.152/2021 மனு தாக்கல் செய்தார் என்றால் சரிதான். மனுவில் அந்த மனுவில் நான் ஆஜராகாமல் 07.03.2022 ஆம் தேதி எக்ஸ் பார்ட்டி ஆகி விட்டேன் என்றால் அந்த வழக்கு என்னவானது என்று எனக்கு தெரியாது. 02.06.2022 ஆம் தேதி என்னை மனுதாரருடன் சேர்ந்து வாழ வேண்டும் என்று உத்தரவு பிறப்பித்த விபரம் எனக்கு

தெரிந்தும் இன்றுவரை நான் மனுதாரருடன் சேர்ந்து வாழாமல் இருந்து வருகிறேன் என்றால் அந்த உத்தரவு பற்றி எனக்கு தெரியாது, ஆனால் எனக்கு சேர்ந்து வாழ விருப்பம் இல்லை. நான் தாக்கல் செய்த விவாகரத்து வழக்கு என்னவானது என்றால் அது தள்ளுபடி ஆகிவிட்டது என்ற விபரம் எனக்கு இரண்டு ஆண்டுகள் கழித்து தெரிய வந்தது. அந்த உத்தரவுக்கு மேல் மேல்முறையீடு எதுவும் செய்துள்ளேன் என்றால் இல்லை. மனுதாரருக்கும் எனக்கும் நடைபெற்ற திருமணம் இன்று வரை ரத்து செய்யப்படாமல் இருக்கிறது என்றால் நான் என்னை கட்டாயப்படுத்தி திருமணம் செய்து கொண்டதாக கூறி, அந்த திருமணம் செல்லாது என்று தான் வழக்கு தாக்கல் செய்தேன்.

9. சிவகாசி சார்பு நீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்த விவாகரத்து மனுவில், இந்த மனுதாரர் இடைக்கால வாழ்க்கை பொருளுதவி கேட்டு I.A.No.165/2018 மனு தாக்கல் செய்தார் என்றால் அது எனக்கு தெரியாது. அந்த மனுவில், மனுதாரருக்கும் அவருடைய குழந்தைக்கும் வாழ்க்கை பொருளுதவியாக மாதம் ரூபாய் 7500, வழக்கு செலவு தொகையாக ரூபாய் 5000 மும் கொடுக்க வேண்டும் என்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது என்றாலும், அந்த விபரம் எனக்கு தெரியும் என்றாலும் எனக்கு தெரியாது. அந்த வாழ்க்கை பொருளுதவி தொகையை நான் செலுத்தவில்லை என்பதால் தான் நான் தாக்கல் செய்த விவாகரத்து மனு 17.09.2019 ஆம் தேதியில் தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் என்னுடைய வழக்கறிஞர் அந்த வழக்கில் ஆஜராகவில்லை, எனக்கும் வாய்தா தேதியை கூறவில்லை. நான் என்னுடன் வேலை செய்யும் ஒரு போலீஸ் மூலம் இ–கோர்ட்டில் வழக்கின் விபரத்தை பார்த்து தெரிந்து கொண்டேன். என்று அதில் என்னவென்று குறிப்பிடப்பட்டிருந்தது என்றால் டிஸ்மிஸ் என்பது மட்டும் குறிப்பிடப்பட்டிருந்தது. இ–கோர்ட்டில், நான் இடைக்கால வாழ்க்கை பொருளுதவி கொடுக்கவில்லை என்பதற்காக வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது என்றுதான் குறிப்பிடப்பட்டிருந்தது என்றால் இல்லை.

10. மனுதாரர் எங்களுக்கு உறவினர் என்றால் எங்கள் ஊரை சார்ந்த நபராவார். நான் சிவகாசி சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்த விவாகரத்து மனுவில், மனுதாரர் எனக்கு உறவினர் என்று கூறியுள்ளேன் என்றால் அவ்வாறுதான் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது, ஆனால் அவர் என்னுடைய ஊரைச் சார்ந்தவர் மற்றும் ஒரே சமூகத்தை சார்ந்தவராவார். இந்த வழக்கில் நான் தாக்கல் செய்துள்ள சாட்சிய வாக்குமூலத்தில் மனுதாரரை என்னுடைய அத்தை மகள் என்று கூறியுள்ளேன் என்றால் சரிதான். நான் கூறிய தகவலின் அடிப்படையில் தான் வழக்கறிஞர் எனக்காக சிவகாசி சார்பு நீதிமன்றத்தில் மனுவும், இந்த வழக்கில் சாட்சிய வாக்குமூலமும் தயார் செய்தார் என்றால் சரிதான்.

11. சுந்தரபாண்டியன் மகன் சண்முக கனி எனக்கு என்ன உறவு முறை என்றால் பெரியப்பா மகன் ஆவார். அவர் எந்த அரசியல் கட்சியில் இருக்கிறார் என்றால் அதிமுக கட்சியில் இருக்கிறார். அவர் எங்களுடைய குடும்ப நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வார் என்றால் எங்களுடைய பெரியப்பா இருக்கும் வரை ஒன்றாக இருந்தோம், நான் போலீஸ் வேலைக்கு சேர்ந்தது சண்முக கனிக்கு பிடிக்கவில்லை என்பதால் அவர் எனக்கு எதிராக செயல்பட்டார். அதனால் நான் அவருடன் பேசுவது கிடையாது. என்னுடைய அம்மாவின் அப்பா மற்றும் என்னுடைய மாமா எந்த கட்சியில் இருக்கிறார்கள் என்றால் அவர்கள் எந்த கட்சியிலும் இல்லை. என்னுடைய மாமா அம்மா பேரவை கட்சியில்

ஓ.மேட்டுப்பட்டி இணை செயலாளராக இருக்கிறார் என்றால் அது எனக்கு தெரியாது. என்னுடைய தாத்தா கிருஷ்ணசாமி நெடுஞ்சாலை துறையில் வேலை செய்தார். என்னுடைய தாத்தா கடந்த மூன்று மாதத்திற்கு முன்பு இறந்துவிட்டார். என்னுடைய தாத்தாவின் இறப்பிற்கு சண்முக கனி கண்ணீர் அஞ்சலி போர்டு எங்கள் ஊர் வாசலில் வைத்திருந்தார் என்றால் அது எனக்கு தெரியாது. அந்த விபரம் எனக்கு தெரியும் என்றாலும், தற்போதும் சண்முக கனியுடன் எங்களுடைய குடும்பம் இணக்கமாக இருக்கிறது என்றாலும் சரியல்ல.

12. நான் மனுதாரரை மேற்படி சண்முக கனியுடன் சேர்ந்து ஏமாற்றி, நான்தான் பதிவு திருமணத்தை செய்து கொண்டேன் என்றால் சரியல்ல. நான் 2013 ஆம் ஆண்டு வேலைக்கு சென்றேன், என்னுடைய நன்னடத்தை காலமான இரண்டு ஆண்டுக்குள் என் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தால் என்னுடைய பணி நிரந்தரம் செய்யப்படாது என்று என்னை சண்முக கனி அவருடைய அரசியல் செல்வாக்கால் மிரட்டி திருமணம் செய்ய வைத்தார். நான் மனுதாரரை ஏமாற்றி, மேற்படி சண்முக கனி மூலம், வழக்கிலிருந்து தப்பிப்பதற்காக பதிவு திருமணம் என்ற நாடகத்தை நடத்தினேன் என்றால் இல்லை.

13. நான் 2011 ஆம் ஆண்டில் இருந்து மனுதாரருடன் அவரை திருமணம் செய்து கொள்கிறேன் என்று பழகி வந்தேன் என்றால் இல்லை. அவர் வேறு நபருடன் பழகியுள்ளார். நான் வீட்டிற்கு கூறி திருமணம் செய்து கொள்கிறேன் என்று கூறி அவருடன் குடும்ப வாழ்க்கையில் இருந்துள்ளேன் என்றால் இல்லை. சிவகாசி சார்பு நீதிமன்றத்தில் பிறப்பிக்கப்பட்ட இடைக்கால வாழ்க்கைப் பொருளுதவி தொகைக்கு என்னுடைய சம்பளத்தில் பிடித்தம் செய்ய கூறினார்கள் என்றால் சரிதான், நான் அது என்னுடைய குழந்தை இல்லை என்பதால் டி என் ஏ பரிசோதனைக்கு உட்படுத்துமாறு கூறினேன், மேலும் அந்த உத்தரவுக்கு எதிராக மாண்புமிகு மதுரை உயர்நீதிமன்றத்தில் தடை உத்தரவு பெற்றேன். தடை உத்தரவின் நிபந்தனையாக நீதிமன்றத்தில் ரூபாய் ஒரு லட்சத்தை வைப்பீடு செய்துள்ளேன் என்றால் சரிதான். நான் குழந்தை என்னுடைய குழந்தை இல்லை என்று கூறி டி என் ஏ டெஸ்ட் எடுக்க வேண்டும் என்று நீதிமன்றத்தில் மனு எதுவும் தாக்கல் செய்தேனா என்றால் சிவகாசி சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்த விவாகரத்து மனுவில் கூறியுள்ளேன்.

14. என்னிடம் காட்டப்படும் ம.சா.ஆ.12 ஆவணமான நான் சிவகாசி சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுவில் DNA test எடுக்க கூறி எதுவும் கூறவில்லை என்றால் சரிதான். மனுதாரருக்கு பிறந்தது என்னுடைய குழந்தை தான் என்பதால் தான் நான் டிஎன்ஏ டெஸ்ட் எடுப்பதற்காக எந்த நீதிமன்றத்திலும் மனு கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. மனுதாரர் தான் மனவேதனை தாங்காமல் டிஎன்ஏ டெஸ்ட் எடுக்க வேண்டும் என்று சாத்தூர் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றாலும், அதில் முதல் தகவல் அறிக்கை எண் 5/2020 (ம.சா.ஆ.8) பதிவு செய்யப்பட்டது என்றாலும் டிஎன்ஏ டெஸ்ட் எடுக்க வேண்டும் என்று மனுதாரர் கூறி வந்ததால் என் மீதும், என் பெற்றோர்கள் மீதும் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார்கள். அந்த வழக்கு சாத்தூர் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1ல் சிசி எண் 22/2022 ஆக விசாரணை இருக்கிறது என்றால் சரிதான்.

15. அந்த குற்ற வழக்கில் டிஎன்ஏ டெஸ்ட் எடுப்பதற்காக சென்றபோது

குழந்தையின் உடல்நல குறைவு காரணமாக டிஎன்ஏ டெஸ்ட் எடுக்க முடியாமல் போனது என்றால் சரியல்ல, அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் இருந்து டிஎன்ஏ டெஸ்ட் எடுப்பதற்காக முதலில் ஒரு உத்தரவு வாங்கியிருந்தார்கள், அப்பொழுது சாத்தூர் அரசு மருத்துவமனைக்கு டி என் ஏ டெஸ்ட் எடுப்பதற்காக வர கூறியிருந்தபோது நான் காவல் துறையில் வேலை செய்வதால் சாத்தூர் அரசு மருத்துவமனை வேண்டாம் என்று மனுதாரர் கூறியதால், விருதுநகர் அரசு மருத்துவமனையில் டிஎன்ஏ டெஸ்ட் எடுப்பதற்காக சென்றோம். ஆனால் அங்கு மனுதாரர் வரவில்லை. அவருடைய செல்போனை சுவிட்ச் ஆப் செய்து வைத்திருந்தார். 10 நாட்கள் கழித்து மீண்டும் கேட்டபோது மனுதாரர் குழந்தையுடன் மதுரை அரசு மருத்துவமனையில் இருப்பதாக கூறினார். இரண்டாவது முறை சாத்தூர் அனைத்து மகளிர் காவல் மூலம் டிஎன்ஏ டெஸ்ட் எடுப்பதற்காக உத்தரவு பெற்றும் அப்பொழுதும் மனுதாரர் டிஎன்ஏ டெஸ்ட் எடுக்க விடவில்லை.

16. மேற்படி டிஎன்ஏ டெஸ்ட் எடுப்பதற்கு மனுதாரர் கொடுத்த புகார் மனுவின் அடிப்படையில் தான் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்றாலும், நான் எவ்வகையிலும் அதற்காக மனு தாக்கல் செய்யவில்லை என்றாலும் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் என்னிடம் கேட்டபோது நான் தான் அவர்களிடம் டிஎன்ஏ டெஸ்ட் எடுக்குமாறு கூறினேன். என்னுடைய வேண்டுகோளின் படி காவல்துறையில் டிஎன்ஏ டெஸ்ட் எடுப்பதற்கு விண்ணப்பிக்கவில்லை என்றாலும், நீதிமன்ற உத்தரவுப்படி அவர்கள் என்னை டிஎன்ஏ டெஸ்டுக்கு அழைத்தார்கள் என்றாலும் சரியல்ல. நான் பலமுறை காவல் நிலையத்தில் புகார் கொடுத்தும் என்னுடைய புகாரை காவல் நிலையத்தில் வாங்காமல் என்னை சரிகட்டி அனுப்பி விட்டார்கள். நான் காவல்துறையில் வேலை செய்யும் நிலையில் என்னுடைய புகாரை காவல் நிலையத்தில் வாங்கவில்லை என்று நான் பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல.

17. குழந்தை எத்தனை வயது வரை இருந்தது என்றால் 7 வயது வரை இருந்திருக்கும் என்று நினைக்கின்றேன், எனக்கு சரியாக ஞாபகம் இல்லை. குழந்தைக்கு என்ன நோய் இருந்தது என்பது எனக்கு தெரியாது. அந்த குழந்தைக்கு இரத்த புற்றுநோய் இருந்தது என்றாலும், மனுதாரரால் அந்த குழந்தைக்கு மருத்துவ செலவு செய்ய முடியாத நிலையில் இருந்தது என்றாலும், நான் அவர்களை புறக்கணித்து விட்டேன் என்றாலும் சரியல்ல. எங்களுக்கு திருமணம் ஆன நாள் முதல் இருந்து நாங்கள் சேர்ந்து வாழ்ந்தது கிடையாது.

18. நான் சிவகாசி சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள மனுவின் 6 வது பத்தியில், "சிறிது காலம் அமைதியாக இருந்த 25.01.2015 ஆம் தேதி எதிர்மனுதாரர் மனுதாரரோடு தகராறு செய்துவிட்டு பெற்றோரின் வீட்டிற்கு சென்றுவிட்டார். ஆனாலும் எதிர்மனுதாரர் மற்றும் அவரது குழந்தையை பராமரிக்க மாதா மாதம் மனுதாரர் பணம் கொடுத்து வந்தார்" என்று நான் கூறியுள்ளேன் என்றால் மனுதாரர் என் மீது விருதுநகர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் கொடுத்த புகாரை விசாரணை செய்த கூடுதல் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் என்னிடம் மனுதாரருக்கும் அவருடைய குழந்தைக்கும் பணம் கொடுக்குமாறு கூறினார், நான் குழந்தை என்னுடைய குழந்தை இல்லை என்று கூறியும் அவர்கள் அதை கேட்காமல் முதலில் பணத்தை கொடுத்து விட்டு, பிறகு பார்த்துக் கொள்ளுமாறு கூறி மிரட்டினார்கள். அதனால் நான் இரண்டு மாதம் பணம் கொடுத்தேன்.

19. மனுதாரர் என் மீது கொடுத்த புகாரில் விசாரணை செய்த பிறகு மனுதாரரை என்னுடைய குடியிருப்பில் குடியிருக்க அனுப்பி வைத்தார்கள் என்றால் மனுதாரருடன் நான் சேர்ந்து வாழ விருப்பமில்லை என்று கூறினேன், அவ்வாறு அவர் என்னுடைய குடியிருப்பில் இருந்தால் நான் குடியிருப்புக்கு வரமாட்டேன் என்று கூறிவிட்டேன். மனுதாரர் என்னுடைய குடியிருப்பில் இருந்த போது நான் மதுரையில் பணியாற்றினேன்.

(மனுதாரரின் வழக்கறிஞரின் வேண்டுகோளின் படி குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது)

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

Judicial Magistrate 2, Sattur.